RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-37 | 06 பிப்ரவரி | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## மகா கும்பமேளா: திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினார் பிரதமர் மோடி

புதுடெல்லி, பிப்.6

மகா கும்பமேளாவை முன்னிட்டு பிரயாக்ராஜ் நகருக்கு வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடி, மூன்று நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினார்.



உத்தரப் பிரதேச மாநிலம், பிரயாக்ராஜில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய 3 நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் கடந்த ஜனவரி 13ம் தேதி முதல் மகா கும்பமேளா நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்று வருகிறது. 144 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகா கும்பமேளாவில் கலந்துகொள்ள இந்தியா மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் இருந்து ஏராளமான பக்தர்கள் தினமும் வந்து புனித நீராடி வருகின்றனர்.

இதுவரை 38 கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள் மகா கும்பமேளாவில் புனித நீராடி உள்ளதாக உத்தரப்பிரதேச அரசு தெரிவித்துள்ளது. வரும் பிப்ரவரி 26ம் தேதி வரை நடைபெறவுள்ள இந்த புனித நீராடும் நிகழ்ச்சியில் சுமார் 45 கோடி பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி, திரிவேணி சங்கமத்தில் இன்று (பிப்ரவரி 5, 2025) புனித நீராடினார். ருத்ராக்ஷ மாலை அணிந்திருந்த பிரதமர் மோடி, அதைக் கொண்டு மந்திரங்களை ஜபித்தார். பின்னர், நீருக்குள் மூழ்கி எழுந்தார். மேலும், சூரியன் மற்றும் கங்கை நதியிடம் பிரார்த்தனை செய்தார். அவருடன் முதல்வர் யோகி ஆதித்யநாத்தும் இருந்தார்.

முன்னதாக, விமானம் மூலம் பிரயாக்ராஜுக்கு வருகை தந்த பிரதமரை, ஆதித்யநாத் வரவேற்றார். பின்னர் அவர்கள் படகு மூலம் திரிவேணி சங்கமத்துக்கு வருகை தந்தார்கள்.


இந்தியாவின் ஆன்மிக மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை பிரதமர் மோடி எடுத்து வருகிறார். இதன் காரணமாக, புனித யாத்திரைத் தலங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, கடந்த டிசம்பர் 13, 2024 அன்று பிரயாக்ராஜுக்கு வருகை தந்த பிரதமர் மோடி, ரூ.5,500 கோடி மதிப்பிலான 167 மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருப்பரங்குன்றம் பிரச்சினையை கையில் எடுத்த பாஜகவின் வாக்கு சதவீதம் பூஜ்ஜியத்துக்கு செல்லும்: அமைச்சர் சேகர்பாபு

சென்னை, பிப்.6

"2026 சட்டப்பேரவைத் தேர்தலில், திருப்பரங்குன்றம் கோயில், தர்கா பிரச்சினையை பாஜக கையில் எடுத்திருப்பதால், அவர்களுடைய வாக்கு சதவீதம் பூஜ்ஜியத்தை அடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை" என்று அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.



சென்னையில் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம் திருப்பரங்குன்றம் மலை விவகாரம் மற்றும் இந்து அமைப்புகள் நடத்திய போராட்டம் குறித்து கேட்கப்பட்டது. அதற்கு அவர் கூறியதாவது: "தயவுசெய்து திருப்பரங்குன்றம் விவகாரத்தில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை இந்து அமைப்பினர் என்று குறிப்பிட வேண்டாம். முழுக்க முழுக்க அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், எங்களைப் பொருத்தவரை பாஜகவினர் தான் என்று நான் குற்றம்சாட்ட விரும்புகிறேன்.

அவர்கள் ஏதோ ஒரு எண்ணத்தை மையமாக வைத்து, இந்த ஆட்சிக்கு ஒரு அபாயத்தை உருவாக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். நேற்று நடத்தப்பட்ட போராட்டம் என்பது தேவையற்ற ஒரு போராட்டம். பல்வேறு ஊடகங்களுக்கு நான் இந்த நேரத்தில் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். அந்த ஊடகங்கள், அப்பகுதியில் வசிக்கின்ற மக்களின் பேட்டிகளை எடுத்திருந்தனர்.

அதில் பேசிய இஸ்லாமிய, இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள், நாங்கள் அண்ணன் தம்பிகளாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்களுக்குள் எந்தவிதமான பிரிவினையும் இல்லை. தேவையில்லாமல், இந்த பகுதிக்கு வரும் வெளியூரில் இருந்து வருபவர்கள்தான், இப்பிரச்சினையை கையில் எடுக்கிறார்கள். எனவே, இது தேவையற்ற பிரச்சினை என்று அப்பகுதி மக்களே கூறியிருக்கின்றனர். எனவே, தான் நாங்களும் இது தேவையற்ற பிரச்சினை என்று கருதுகிறோம். திருப்பரங்குன்றத்தில் நேற்று ஒரு பெரிய கூட்டத்தைக்கூட்டி, மதவாதம், இனவாதம், மொழிவாதம் என்ற பிரச்சினையை பிரிவினையை ஏற்படுத்த நினைத்தார்கள். வடமாநிலங்களில் வேண்டும் என்றால், அதற்கான சாத்தியக்கூறுகள் அமையக்கூடும்.

எச்.ராஜா, அண்ணாமலை போன்றோருக்கு சொல்லிக் கொள்கிறேன். முதல்வர் எங்களை அடக்கிவாசிக்க சொல்லியிருக்கிறார். ஆனால், அவர்கள் வட மாநிலத்தைப் போல தமிழகத்திலும் கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என நினைக்கிறார்கள். தமிழக முதல்வர் உறுதிமிக்கவர். எங்கு கலவரம் ஏற்பட்டாலும் இரும்புக்கரம் கொண்டு அடக்க தயாராக இருக்கிறார். இந்த மண்ணில், பெரியார், திராவிட மண்ணில், திராவிட மாடல் ஆட்சியில் அதுபோன்ற நிகழ்வுகள் நடக்க ஒருகாலமும் அனுமதிக்கமாட்டார்.

திருப்பரங்குன்றம் மலையைப் பொருத்தவரையில், 1920ம் ஆண்டு மதுரை சார்பு நீதிமன்றம் ஒரு உத்தரவை வழங்கியது. பின்னர், லண்டன் பிரிவியூ கவுன்சில் ஒரு உத்தரவு பிறப்பித்தது. அதைத்தொடர்ந்து 1958, 1975, 2004, 2017 மற்றும் 2021 என்று பல நேரத்தில் நீதிமன்றங்கள் பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்திருக்கிறது. தற்போதுகூட, இந்த விவகாரம் தொடர்பான இரண்டு வழக்குகள் நீதிமன்றத்தில நிலுவையில் உள்ளன. கடந்த காலங்களில் 7 வழக்குகளில் எதன் அடிப்படையில் நீதிமன்றங்கள் உத்தரவு வழங்கியதோ, அந்த உத்தரவுகளின் அடிப்படையில்தான், இந்த அரசு அதை மதித்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.


ஆனால், இந்த பிரச்சினையை வைத்து அரசியல் குளிர்காயலாம் என்று நினைக்கிறார்கள். நீதிமன்ற வழிகாட்டுதலின்படி தான் இந்த அரசு செயல்படும். விரைவில் முதல்வரின் அனுமதியோடு துறையின் அமைச்சர் என்ற முறையில் திருப்பரங்குன்றம் மலைக்கு செல்லவிருக்கிறேன். கோயிலைப் பொருத்தவரை, 2023 மற்றும் 2025ம் ஆண்டுகளில் தொடரப்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. அந்த வழக்கில் வரும் தீர்ப்பின் அடிப்படையில், இந்த அரசு அந்த தீர்ப்பின் உத்தரவை மேற்கொள்ளும்.

கோயில் நிர்வாகத்தைப் பொருத்தவரையில், தர்கா தரப்பினருக்கும், வழிபாட்டு முறைகளில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் தொடர்பாக நீதிமன்றத்தின் உத்தரவே பின்பற்றப்பட்டு வருகிறது. அந்தப்பகுதியில் இஸ்லாமியர்களும், இந்துக்களும் மாமன் மச்சான்களாக சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களை அந்நியப்படுத்தி பாஜக தேர்தல் ஆதாயம் அடையலாம் என்று நினைக்கிறார்கள்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலில், திருப்பரங்குன்றம் கோயில், தர்கா பிரச்சினையை பாஜக கையில் எடுத்திருப்பதால், அவர்களுடைய வாக்கு சதவீதம் பூஜ்ஜியத்தை அடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. நேற்று நடந்த ஆர்ப்பாட்டத்தில்கூட, ஒரு மதத்துக்கு எதிரான கோஷங்களைத்தான் எழுப்பினார்கள். மதத்தால், இனத்தால் மக்களை வேறுபடுத்தி பேசினார்கள். ஆனால், இந்த விவகாரத்தில், ஏற்கெனவே என்ன மாதிரியான வழிபாட்டு வழிமுறைகளை பின்பற்றினார்களோ, அதுவே தொடரும்," என்று அவர் கூறினார்.

## 205 இந்தியர்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட அமெரிக்க விமானம் அமிர்தசரஸ் வருகிறது

புதுடெல்லி, பிப்.6



205 சட்டவிரோத இந்திய குடியேறிகளை ஏற்றிக்கொண்டு அமெரிக்காவில் இருந்து புறப்பட்ட அந்நாட்டு ராணுவ விமானம், பிற்பகல் ஸ்ரீ குரு ராம்தாஸ் ஜி சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்க உள்ளது.

முன்னதாக, விமானம் இன்று காலையில் தரையிறங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. விமானத்தில் உள்ளவர்கள் குறித்த விவரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. அமெரிக்க ராணுவ விமானம் சி17, பஞ்சாப் மற்றும் அண்டை மாநிலங்களைச் சேர்ந்த 205 சட்டவிரோத குடியேறிகளை ஏற்றிச் சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பஞ்சாப் என்ஆர்ஜ விவகார அமைச்சர் குல்தீப்சிங் தலிவால், "அமெரிக்க அரசாங்கத்தின் முடிவு ஏமாற்றமளிக்கிறது. இவர்கள் பணியாற்றுவதற்காக அமெரிக்கா சென்றனர். பின்னர் அவர்களின் விசா காலம் காலாவதியானது. இதனால் அவர்கள் சட்டவிரோத குடியேறிகளாக மாறி உள்ளனர். அந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களித்த இவர்களை நாடு கடத்தப்படுவதற்குப் பதிலாக நிரந்தர குடியுரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

அமெரிக்காவில் வசிக்கும் பஞ்சாபியர்களின் நிலை தொடர்பாக விவாதிக்க வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை அடுத்த வாரம் சந்திக்க திட்டமிட்டுள்ளேன். சட்டவிரோத வழிகளில் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டாம் என்று பஞ்சாபியர்களை கேட்டுக் கொள்கிறேன். உலகளவில் வாய்ப்புகளைப் பெற திறன்களையும், கல்வியையும் பெறுவது அவசியம். வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு முன் சட்டப்படி செல்வதற்கான வழிகளை அவர்கள் ஆராய வேண்டும்" என்று தெரிவித்தார்.

அமெரிக்காவில் சுமார் 4.78 கோடி பேர் சட்டவிரோதமாக குடியேறி இருப்பதாக கணக்கிடப்பட்டு உள்ளது. இதில் இந்தியாவை சேர்ந்த சுமார் 8 லட்சம் பேர் அந்த நாட்டில் சட்டவிரோதமாக தங்கி இருப்பதாகக் கூறப்படுகிறது. கடந்த மாதம் 20ம் தேதி அமெரிக்காவின் புதிய அதிபராக பதவியேற்ற டொனால்டு ட்ரம்ப், சட்டவிரோதமாக குடியேறிய அனைவரையும் வெளியேற்ற உத்தரவிட்டுள்ளார். முதல்கட்டமாக 15 லட்சம் வெளிநாட்டினர் அடங்கிய பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் இந்தியாவை சேர்ந்த 18,000 பேர் உள்ளனர்.

இந்த சூழலில் அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய 205 இந்தியர்களை அந்த நாட்டு அரசு நேற்று ராணுவ விமானத்தில் திருப்பி உளள்து. அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருந்து புறப்பட்ட விமானம் பஞ்சாபின் அமிர்தசரஸில் இன்று பிற்பகல் தரையிறங்க உள்ளது.

அமெரிக்க அரசு வட்டாரங்கள் கூறியதாவது: அமெரிக்காவின் டெக்சாஸ், கலிபோர்னியா, சான்டியாகோ உள்ளிட்ட 12 மாகாணங்களில் சட்டவிரோதமாக குடியேறியவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அந்த மாகாணங்களில் நாள்தோறும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இதுவரை 25,000க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு உள்ளனர். அவர்கள் சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு, பின்னர் அவரவர் நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றனர்.

மெக்ஸிகோ மற்றும் தென் அமெரிக்க நாடுகளுக்கு இதுவரை 5,000 பேர் ராணுவ சிறப்பு விமானங்களில் திருப்பி அனுப்பப்பட்டு உள்ளனர். முதல்கட்டமாக இந்தியாவைச் சேர்ந்த 205 பேரை அந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பி உள்ளோம். எந்த நாடும் ஏற்காத சட்டவிரோத குடியேறிகளை எல் சல்வடார் நாட்டில் உள்ள சிறையில் அடைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதுதொடர்பாக அமெரிக்காவுக்கும் எல் சல்வடார் நாட்டுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இவ்வாறு அமெரிக்க அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

## 'வாக்களிக்கும் முன்பு டெல்லியின் நிலையை மனதில் கொள்ளுங்கள்' வேண்டுகோள் விடுத்த ராகுல்காந்தி

புதுடெல்லி, பிப்.6



டெல்லி பேரவைக்கு இன்று வாக்குப்பதிவு நடந்து வரும் நிலையில், அதன் தற்போதைய நிலையை மனதில் கொள்ளுமாறு வாக்காளர்களை வலியுறுத்தியுள்ள ராகுல் காந்தி, டெல்லியில் மிகப் பெரிய ஊழல் செய்து யார்? என்று கேள்வி எழுப்பி கேஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சியைச் சாடியுள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் எம்பியுமான ராகுல் காந்தி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "வாக்களிக்கும் போது, டெல்லியின் காற்று மாசுக்கு, அசுத்தமான குடிநீருக்கு, மேடு பள்ளமான சாலைகளுக்கு யார் பொறுப்பு என்பதை நினைவில் நிறுத்திக்கொள்ளுங்கள். தூய்மையான அரசியல் பற்றி பேசும் அதேவேளையில், டெல்லியில் மிகப்பெரிய ஊழல் செய்து யார்?

எனது அன்பான டெல்லி சகோதர, சகோதரிகளே.. நீங்கள் அனைவரும் சென்று வாக்களிக்க வேண்டும் என்று உங்கள் அனைவரையும் நான் வேண்டிக்கொள்கிறேன். காங்கிரஸ் கட்சிக்கு நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும், உங்களின் உரிமைகளைப் பாதுகாக்கும், அரசியலமைப்பை வலுப்படுத்தும். மேலும் டெல்லியை மீண்டும் முன்னேற்றப்பாதைக்கு அழைத்துச் செல்லும்" என்று தெரிவித்துள்ளார்.

டெல்லி வாக்குப்பதிவு: 70 தொகுதிகள் கொண்ட டெல்லி சட்டப்பேரவைக்கு புதன்கிழமை காலை 7 மணி தொடங்கி வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. காலை 11 மணி நிலவரப்படி, 19.95 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளன.

டெல்லியில் மொத்தம் 1.56 கோடி வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் 83.76 லட்சம் பேர் ஆண்கள், 72.36 லட்சம் பேர் பெண்கள், 1,267 பேர் மூன்றாம் பாலினத்தவர்கள். இவர்கள் வாக்களிப்பதற்காக டெல்லி முழுவதும் 13,766 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

டெல்லி சட்டப்பேரவைத் தேர்தலில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, ராஜேந்திர பிரசாத் கேந்த்ரிய வித்யாலயா பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் வாக்களித்தார். டெல்லி முதல்வர் அதிஷி தனது வாக்கினை செலுத்தினார்.

காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி வதேராவின் கணவர் ராபர்ட் வதேரா வாக்களிக்கச் செல்லும் முன் செய்தியாளர்களை சந்தித்தபோது, "மாற்றம் வேண்டும் என நினைத்தால் அனைவரும் வெளியே வந்து வாக்களியுங்கள். சாதாரண நபர்கள் என்று காட்டிக் கொள்பவர்கள் உண்மையில் அப்படியானவர்கள் அல்ல. அவர்கள் டெல்லியை மோசமாக நிர்வகித்துள்ளனர்." என்றார்.

அரவிந்த் கேஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்து கட்சிக்கு ஹேட்ரிக் வெற்றி பெற்றுத்தரும் முனைப்பில் களம் கண்டுள்ளது. அதேவேளையில் காங்கிரஸ், ஆம் ஆத்மி என டெல்லியில் ஆட்சி அதிகாரம் கனவாகிப் போனதை மாற்றி 25 ஆண்டுகளுக்குப் பின்னர் டெல்லியில் பாஜக ஆட்சி அமைக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் அக்கட்சி களம் கண்டுள்ளது. இதில் ஆம் ஆத்மி ஹேட்ரிக் வெற்றி பெறுமா இல்லை பாஜகவின் 25 ஆண்டு கால கனவு நிறைவேறுமா என்பது வரும் 8ம் தேதி வாக்கு எண்ணிக்கையின் போது தெரியவரும்.



திண்டுக்கல் மாவட்டம் பழநியில் தைப்பூசத் திருவிழா பெரியநாயகியம்மன் கோயிலில் இன்று (பிப்.5) காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் பிப்.11ம் தேதி மாலை நடைபெற உள்ளது. அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடான பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உப கோயிலான பெரியநாயகியம்மன் கோயிலில் தைப்பூசத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. முன்னதாக, சுவாமி, கொடிமரம் மற்றும் கொடி ஆகியவற்றுக்கு சிறப்பு ஆராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து, வேல், மயில், சேவல் இடம் பெற்ற கொடியேற்றப்பட்டது.

## குற்றங்கள் செய்வதற்கு கட்சி அடையாளம் லைசென்ஸா? திமுகவுக்கு இபிஎஸ் கண்டனம்

சென்னை, பிப்.6



"சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே டாஸ்மாக் கடை ஒன்றில் கள்ளச் சாரயம் விற்கப்படுவதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. கள்ளக்குறிச்சி கள்ளச் சாராயம் மரணங்களில் இந்த அரசு ஒரு பாடம் கூட கற்கவில்லையா?. தமிழகத்தில் நீங்கள் ஆட்சிக்கு வந்தது, உங்கள் கட்சி அடையாளத்தை லைசன்சாக பயன்படுத்தி, சகல குற்றங்களையும் திமுகவினர் செய்வதற்கு தானா ?" என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே டாஸ்மாக் கடை ஒன்றில் கள்ளச் சாரயம் விற்கப்படுவதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. மரக்காணம் மரணங்களில் இருந்தோ, நாட்டையே உலுக்கிய கள்ளக்குறிச்சி கள்ளச்சாராயம் மரணங்களில் இருந்தோ இந்த ஸ்டாலின் மாடல் அரசு ஒரு பாடம் கூட கற்கவில்லையா?

"போலீஸுக்கு பணம் கொடுத்து தான் விற்கிறோம்" என்று கள்ளச்சாராயம் விற்பவன் தைரியமாக சொல்லும் அளவுக்கு கள்ளச்சாராய விற்பனையை நிறுவனமயப் படுத்தியுள்ளதற்கு ஸ்டாலின் மாடல் திமுக அரசு வெட்கப்பட வேண்டும். போதாக்குறைக்கு, "திமுக கட்சிக்காரன்" எனும் அடையாளம் வேறு. திமுக என்றால், இரண்டு கொம்பு முளைத்தவர்களா?

அவர்கள் எந்த தவறு செய்தாலும் காவல்துறை கண்டு கொள்ளாதா? தமிழகத்தில் நீங்கள் ஆட்சிக்கு வந்தது, உங்கள் கட்சி அடையாளத்தை லைசன்சாக பயன்படுத்தி, சகல குற்றங்களையும் திமுகவினர் செய்வதற்கு தானா ?

உடனடியாக இந்த கள்ளச் சாராய விற்பனையில் தொடர்புள்ள அனைவரையும் கைது செய்வதோடு, எந்தவித அரசியல் குறுக்கீடும் இன்றி அனைவர் மீதும் சட்ட நடவடிக்கையை உறுதி செய்ய வேண்டுமென ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன். மேலும், தமிழகம் முழுக்க கள்ளச் சாராயத்தை ஒழிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்துகிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

# மேல்மருவத்தூர் குரு அருள் அம்மா 85வது அவதார திருநாள்! ஆன்மீக ஜோதி ஏற்று விழா




மேல்மருவத்தூர், பிப்.6

தென் சென்னை மாவட்டம் சார்பில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மீக இயக்கம் மற்றும் வழிப்பாட்டு மன்றம் ஆன்மீக குரு அருள் அம்மா அவர்களின் 85வது அவதார திருநாள் முன்னிட்டு ஆன்மீக ஜோதி ஏற்று விழா நடைபெற்றது.

சென்னை அடுத்த சோழிங்கநல்லூர் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கம் மற்றும் வழிப்பாட்டு மன்றங்கள் சார்பில் ஆன்மீக குரு அருள் அம்மா அவர்களின் 85வது அவதார திருநாள் முன்னிட்டு ஆன்மீக ஜோதி ஏற்று விழா சோழிங்கநல்லூர் பொன்னியம்மன் கோவில் வளாகத்தில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மீக இயக்கத் துணைத்தலைவர் ஆன்மீககுரு இளைய தெய்வம் சின்னவர் சார்பில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கலச விளக்கு வேள்வி பூஜை மற்றும் அவதார திருநாள் ஆன்மீகஜோதி ஏற்றுதல் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது

இதில் ஏராளமான பொதுமக்கள் கோவில் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அதனைத் தொடர்ந்து சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மாபெரும் அன்னதான வழங்கி சிறப்பித்தனர்.




திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட வேப்பிலாங்குளம் ஊராட்சி செயலர் சங்கர் படுகொலை செய்யப்பட்டார்.இந்த படுகொலையை கண்டித்து தேனி மாவட்டம் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் ஊராட்சி செயலாளர்கள் கூட்டமைப்பு சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஊராட்சி செயலாளர்கள் கருப்பு பேட்ஜ் அணிந்து குற்றவாளிகளை கைது செய்யக்கோரி கண்டன கோஷம் எழுப்பினர்..




புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சமூக ஆர்வலர் ஜகபர் அலி கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட ஆர் ஆர் கல்குவாரி உரிமையாளரின் ஆர் ஆர் நகை அடகு கடை. மற்றும் ஆர்ஆர் பைனான்ஸ் கடையை திருமயத்தில் சிபிசிஐடி போலீசார் கடையை திறந்து நேற்று ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர் இதில் சிபிசிஐடி ஆய்வாளர்கள், காவலர்கள் ஆய்வு நடத்தி வருகின்றனர்..

## சிவகங்கை மாவட்ட மாணவர்கள் யோகாசனம் செய்து உலக சாதனை




சிவகங்கை பிப்.6

இந்திய யோகாசன விளையாட்டு கூட்டமைப்பு சார்பாக சென்னையில் நோபல் பரிசு உலக சாதனை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பல மாவட்டங்களில் இருந்து மாணவ மாணவிகள் பங்கேற்றனர். இவ்வுலக சாதனையில் மொத்தம் 5000 மாணவர்கள் பங்கு பெற்று உலக சாதனை படைத்தனர். இதில் சிவகங்கை மாவட்டம் சார்பாக 52 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு உலக சாதனை படைத்தனர். இச்சாதனையில் சிவகங்கை மாவட்ட செயலாளர் யோகா ஆச்சாரியார் புவனேஷ் மாணவர்களை வழி நடத்தினார். உலக சாதனை நிகழ்ச்சியில் இந்தியன் யோகாசன விளையாட்டு கூட்டமைப்பு செயலாளர் டாக்டர். அரவிந்த் லட்சுமி நாராயணன், தமிழ்நாடு




யோகா கூட்டமைப்பு செயலாளர் பரணிதரன் நோபல் பரிசு உலக சாதனை (சிளிளி) வினோத்குமார், இந்திய யோகாசன நடுவர் பரத் குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் நிகழ்ச்சியில் பங்கு பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் விருதுகளும் வழங்கினர். மேலும் 2025 ஆண்டிற்கான யோகா கலைமாமணி விருது சிவகங்கை மாவட்ட யோகாசன செயலாளர் மற்றும் சாய்மகிழ் யோகா மையத்தின் நிறுவனர் யோகா ஆச்சாரியார் புவனேஷ்க்கு வழங்கப்பட்டது.

தண்ணீர் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புஜங்காசனம் நிலையில் நெற்றியில் டம்ளரில் தண்ணீர் வைத்தபடி யோகாசனம் செய்து உலக சாதனை படைத்தனர்.




தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில் சங்கச்சாவடிகளின் எண்ணிக்கை 90 ஆக உயர்த்தப்படவுள்ளது. தற்போது 72 சங்கச்சாவடிகள் செயல்பாட்டில் உள்ளன. ரூ.20,000 கோடி மதிப்பீட்டில் 963 கி.மீ நீளமுள்ள 4 வழிச்சாலை அமைக்கப்பட்ட பிறகு இந்த எண்ணிக்கை உயர்கிறது.

## பத்திரிகையாளர்களை துன்புறுத்த கூடாது! நீதிமன்றம் உத்தரவு




சென்னை, பிப்.6

சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி வன்கொடுமை வழக்கில் விசாரணை என்ற பெயரில் பத்திரிக்கையாளர்களை துன்புறுத்த கூடாது என சிறப்பு விசாரணை குழுவுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.பத்திரிக்கையாளர்களிடம் இருந்து பறிமுதல் செய்த செல்போன்களை அவர்களிடமே திரும்ப ஒப்படைக்க வேண்டும். விசாரணை என்ற பெயரில் பத்திரிக்கையாளர்களை அச்சுறுத்தல் செய்ய கூடாது என நீதிபதி ஜி.கே.இளந்திரையன் உத்தரவிட்டார். மேலும், பத்திரிக்கையாளர்களிடம் விசாரணை நடத்த வேண்டும் என்றால் உரிய சம்மன் அனுப்ப வேண்டும் என்றும், சிறப்பு விசாரணை குழுவின் விசாரணைக்கு பத்திரிக்கையாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டார்.

## மின்வாரியம் நடவடிக்கை எடுக்குமா?



இராமநாதபுரம் மாவட்டம் உச்சப்புளி கோகுல் நகர் நூர் கிளினிக் அருகில் உள்ள தெரு விளக்கு மின் கம்பம் சிதலமடைந்து விழும் தருவாயில் உள்ளது ஏதேனும் அசம்பாவிதம் நடைபெறும் முன்னரே பழைய மின்கம்பத்தை அகற்றிவிட்டு புதிய மின்கம்பத்தை நட வேண்டும் என அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் இதுகுறித்து மின்வாரியம் நடவடிக்கை எடுக்குமா? என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர்.

## மானாமதுரை பகுதிகளில் நாளை மின்தடை



மானாமதுரை, பிப்.6

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிப்காட் துணை மின்நிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிப் 07 மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெறுகின்றன. எனவே அன்று காலை 10மணி முதல் மதியம் 2 மணி வரை மானாமதுரை, சிப்காட், ராஜகம்பீரம், கட்டிக்குளம், மிளகனூர், முத்தனேந்தல், தெ. புதுக்கோட்டை, கீழப்பசலை, சங்கமங்கலம், குறிச்சி, முனைவென்றி, கச்சாத்தநல்லூர், நல்லாண்டிபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என செயற்பொறியாளர் ஜான்சன் தெரிவித்துள்ளார்..

## திருவாடானை துணை மின் நிலைய பகுதிகளில் மின்தடை



திருவாடானை, பிப்.,6

ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை துணை மின் நிலையம், மற்றும் நகரிக் காத்தான் துணை மின் நிலையங்களில் இன்று மின்தடை ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவாடானை, சிகே மங்கலம், பாண்டுகுடி, நகரிக்கத்தான், வெள்ளையபுரம், மங்கலகுடி, அஞ்சு கோட்டை, குஞ் சங்குளம், வாணியேந்தல், கோடனூர், எட்டு குடி, மல்லனூர், ஆண்டாஊரணி, ஓரியூர், சிறுகம்பையூர், அரசூர், ஜி.நாகனி, ஓரிக்கோட்டை, செவ்வாய்பேட்டை, புளியால், செலுகை, கல்லூர், திருவிடைமதியூர், பதனக்குடி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் மின்தடை ஏற்படும் என்று மின் செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்..

# பாம்பன் பாலம் ரூ.550 கோடியில் புதிதாக கடலில் அமைக்கப்பட்டுள்ளதை பிரதமர் மோடி திறந்து வைக்கிறார்

இராமேஸ்வரம் பிப்.6


இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் அருகே பாம்பன் கடலில் அமைக்கப்பட்டுள்ள பழைய தூக்குப்பாலத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. இதையடுத்து 2022ம் ஆண்டு பாலத்தில் ரயிலை இயக்க ரயில்வே நிர்வாகம் தடை விதித்தது. மேலும் தூக்குப்பாலம் விரிசல் மற்றும் அதிக அதிர்வு காரணமாக வலுவிழந்தது. இதையடுத்து ரயில்வே நிர்வாகம் 2023, பிப்ரவரி மாதம் பாம்பன் பழைய பாலத்தில் ரயில் சேவை நிரந்தரமாக நிறுத்தப்படுவதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இதனால், ராமேஸ்வரம் வரை செல்லும் அனைத்து ரயில்களும் தற்போது வரை மண்டபம் ரயில் நிலையம் மட்டுமே இயக்கப்பட்டு வருகிறது. இதையடுத்து பாம்பன் கடலில் ரூ.550 கோடி மதிப்பில் புதிய இரட்டை வழித்தட மின்சார ரயில் பாலம் அமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு கடந்தாண்டு இறுதியில் நிறைவு பெற்றது.பல்வேறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட புதிய ரயில் பாலம் தற்போது திறப்பு விழாவிற்கு தயாராகியுள்ளது. இம்மாதத்திற்குள் புதிய பாலத்தை திறந்து வைத்து, பயணிகளுடன் ராமேஸ்வரம் வரை மீண்டும் ரயில் சேவையை தொடர ரயில்வே நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. இதன்



முதல்கட்டமாக கடந்த 31ம் தேதி அதிகாலை 5 மணிக்கு கன்னியாகுமரி விரைவு ரயிலில் வந்த பயணிகள் அனைவரும் வழக்கம் போல் மண்டபம் ரயில் நிலையத்தில் இறக்கி விடப்பட்டனர். பின்னர் பராமரிப்பு பணிக்காக மண்டபம் ரயில் நிலையத்திலிருந்து காலை 6 மணிக்கு பயணிகளின்றி, 18 காலி பெட்டிகளுடன் புறப்பட்ட விரைவு ரயில் சுமார் 60 கிமீ வேகத்தில் புதிய ரயில் பாலம் வழியாக ராமேஸ்வரம் ரயில் நிலையம் சென்றடைந்தது.

2 ஆண்டு இடைவெளிக்கு பிறகு நேற்று ராமேஸ்வரம் ரயில் நிலையத்தில் மீண்டும் ரயில் பெட்டிகள் பராமரிப்பு பணிகள் துவங்கியது.தொடர்ந்து பகல் 12 மணிக்கு இந்தியாவின் முதல் செங்குத்து தூக்குப்பாலம் திறக்கப்பட்டது. இதில் இந்திய கடலோர காவல் படையின் ரோந்து கப்பல் பாக் ஜலசந்தி கடல் பகுதியில் இருந்து மன்னார் வளைகுடா கடல் நோக்கி கடந்து சென்றது. பின் தூக்குப்பாலம் இறக்கப்பட்டு மண்டபத்தில் இருந்து 22 காலி ரயில் பெட்டிகளுடன் வந்த போட் மெயில் ரயில் புதிய பாலத்தை கடந்து ராமேஸ்வரம் சென்றது.

இந்த ரயிலை பொறியாளர்கள் தூக்குப்பாலத்தின் நுழைவில் நிறுத்தி வைத்து ஆய்வு நடத்தினர். பின் மீண்டும் தூக்குப்பாலம் உயர்த்தி திறக்கப்பட்டு இந்திய கடலோர காவல் படை ரோந்து கப்பல் கடந்து பாக் ஜலசந்தி கடலுக்கு சென்றது. காலையில் பராமரிப்பு பணிக்கு ராமேஸ்வரம் சென்ற கன்னியாகுமரி விரைவு ரயிலை திருப்பதிக்கு மாற்றி நண்பகல் 2 மணியளவில் ரயில் பாலத்தை கடந்து சென்றது. அதன்பின் தூக்குப்பாலத்தை முழுமையாக மூடி ரயில்வே அதிகாரிகள் ஒத்திகையை நிறைவு செய்தனர்.



புதிய பாலத்தை பிரதமர் திறந்து வைக்கிறார்பாம்பன் புதிய ரயில் பாலம் அனைத்து சோதனை ஓட்டங்களையும் கடந்து திறப்பு விழாவுக்கு தயார் நிலையில் உள்ளது. புதிய பாலத்தை தைப்பூச தினமான வரும் 11ம் தேதி பிரதமர் மோடி நேரடியாக வந்து பாம்பன் பாலத்தை திறக்க உள்ளார். இதற்காக அவர் தமிழகம் வருகிறார்.

மண்டபத்தில் உள்ள இந்திய கடலோர காவல்படை நிலையத்தில் இருந்து கப்பல் மூலம் பிரதமர் மோடி பாம்பன் வருகிறார். அங்கிருந்து கப்பலில் சென்று பழைய பாலம் மற்றும் புதிய பாலத்தை பார்வையிடுகிறார். பின்னர், புதிய ரயில் பாலத்தை கொடியசைத்து போக்குவரத்தை தொடங்கி வைக்கும் பிரதமர் மோடி, அந்த ரயிலில் பயணம் செய்யும் வகையில் திறப்பு விழா நிகழ்ச்சி திட்டமிடப்பட்டு உள்ளது. இதையொட்டி பிரதமரின் பாதுகாப்புத்துறை அதிகாரிகள், ஓரிரு நாட்களில் மண்டபம், ராமேஸ்வரம் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய உள்ளனர்.

## தக்கலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பண்டார விளை குழந்தைகள் மையத்தினை வைத்த கன்னியாகுமரி ஆட்சித்தலைவர்





கன்னியாகுமரி, பிப்.6

கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சித்தன் தோப்பு பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பண்டாரவிளை குழந்தைகள் மையத்தினை திறந்து வைத்து, பேசுகையில்

கன்னியாகுமரி மாவட்டம் மிக அழகான மாவட்டமாகும். நமது மாவட்டத்தில் 1401 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தக்கலை ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் 147 அங்கன்வாடி மையங்கள் உள்ளன. அங்கன்வாடி மையங்கள் அதிகமாக உள்ள மாவட்டங்களில் நம்முடைய கன்னியாகுமரி மாவட்டமும் ஒன்றாகும். மின்சார வசதி இல்லாத எந்த ஒரு அங்கன்வாடி மையமும் நமது மாவட்டத்தில் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். குடிநீர் வசதி ஒரு சில அங்கன்வாடி மையங்களில் மட்டும் அருகில் இல்லாமல் உள்ளது. அதனையும் கூடிய விரைவில் அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் குடிநீர் வசதிகள் அமைத்திட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தக்கலை வட்டாரம் நுள்ளிவிளை ஊராட்சிக்கு உட்பட்ட பண்டாரவிளை குழந்தைகள் மையம் ஆலயத்திற்கு சொந்தமான இடத்தில் சுமார் 42 வருடங்களாக அரசு கட்டிடத்தில் செயல்பட்டு வந்தது. அக்கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததால் அதனை இடித்து ஒரு அங்கன்வாடி மையத்திற்கு தேவையான குழந்தைகளுக்கான தனி அறை, சமையலுக்கு தனி அறை, பொருட்கள் வைக்கும் இடம், குழந்தைகள் விளையாடுவதற்கான இடம், குழந்தைகளுக்கான கழிப்பறை, குடிநீர் வசதி, உள்ளிட்ட அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய கட்டிடம் பொதுமக்களின் பங்களிப்புடன் கட்டப்பட்டுள்ளதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். பாராட்டுகிறேன்.

நமது மாவட்டத்திற்குட்பட்ட அங்கன்வாடி மையங்களில் 85 ஆயிரம் குழந்தைகள் படித்துக்கொண்டு வருகிறார்கள். 0 முதல் ஆறு வயது வரை உள்ள குழந்தைகள் அங்கன்வாடி மையங்களில் வந்து கல்வி பயிலலாம். மேலும் தாய்மார்கள் மற்றும் பெண்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள் அனைத்து குழந்தைகளும் சரியான அளவில் எடையில் உள்ளார்களா என்பதை தெரிந்துக்கொண்டு, அதற்கு ஏற்ப சரிவிகித உணவுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, பேசினார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் ஜெயந்தி, பங்கு பணியாளர் அருட்பணி.மரிய வின்சென்ட், சடையமங்கலம் முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் வழக்கறிஞர் அருள் ராஜ், கல்குளம் வட்டாட்சியர் சஜித், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சாந்தி, பிரேமலதா, துறை அலுவலர்கள், ஊர்பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## சிவகங்கை மாவட்டம் மினி பேருந்துக்கான புதிய விரிவான திட்டம் சாலை போக்குவரத்து சேவை வழங்குவதற்கான நடவடிக்கைகள்

சிவகங்கை, பிப்.6

மினி பேருந்துக்கான புதிய விரிவான திட்டம் 2024 மற்றும் மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் மினி பேருந்தின் கட்டண திருத்தம் வாகன சட்டம் 1988 G.O.Ms.No.33, நாள் 23.01.2025 ன் படி பொதுமக்களின் நலன் கருதி அதிக குடும்பங்களைக் கொண்ட கிராமங்கள், குக்கிராமங்கள், குடியிருப்புகளில் உள்ள மக்களுக்கு போதுமான பொருளாதார மற்றும் ஒழுங்கான ஒருங்கிணைந்த சாலை போக்குவரத்து சேவையை அரசு வழங்குவதற்காகவும், 100 அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பங்களின் மக்கள் தொகை மற்றும் போதுமான பேருந்து சேவைகள் வழங்கப்பட்டுள்ள அருகில் உள்ள பேருந்து நிலையம் அல்லது அருகிலுள்ள நகரத்தை அடைய எந்த வழியும் இணைக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும் நோக்கிலும் தமிழக அரசால் மேற்படி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த புதிய விரிவான திட்டம் 2024 வெளியீடு உடனடியாக அமலுக்கு வருகிறது. மேலும், தமிழ்நாடு மாநிலத்தில் மினி பேருந்துக்கான கட்டண திருத்தம் 01.05.2025 முதல் நடைமுறைக்கு வரவுள்ளது

இத்திட்டத்தின், முக்கிய அம்சங்களாக அதிகபட்ச தூரம் 25 கிலோ மீட்டருக்கு மிகையாக இருத்தல் கூடாது, குறைந்தபட்ச போக்குவரத்து சேவை செய்யப்படாத பாதை நீளம் (Unserved Route Length) வழித்தடத்தின் மொத்த பாதை நீளத்தில் 65% க்கு குறைவாக இருத்தல் கூடாது.

மேலும், தொடக்கப்பள்ளி / முனையப்புள்ளி என்பது சேவை செய்யப்படாத குடியிருப்பு / கிராமத்தில் ஏதேனும் ஒன்றாக இருத்தல் வேண்டும். முனையப்புள்ளிகளில் ஒன்று பேருந்து நிறுத்தம் அல்லது பேருந்து நிலையம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

அதேபோன்று, முனைய புள்ளியிலிருந்து அடுத்த ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் அரசு மருத்துவமனை மேல் நிலைப்பள்ளி, கல்லூரி, ரயில் நிலையம், உழவர் சந்தை, வேளாண் ஒழுங்குமுறை சந்தை, ஆட்சியர் அலுவலகம், தாலுகா அலுவலகம், அல்லது பேருந்து நிலையத் திற்கு சற்று முன்பு உள்ள இடம் மற்றும் வழங்கப்பட்ட பாதை அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட பாதை நீளத்தை விட அதிகமாக இருத்தல் வேண்டும். பின்னர் பிராந்திய போக்குவரத்து ஆணையம்/ மற்ற பங்குதாரர்களுடன் கலந்து ஆலோசித்து, அதாவது மாநில போக்குவரத்து நிறுவனங்கள் உள்ளாட்சி அமைப்புகள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் போன்றவை மேற்கூறிய தேவைப்படும் இடங்களுக்கு பயணிகளை சென்றடைய உதவும் வகையில் சேவைபகுதியில் ஒரு கிலோ மீட்டர் வரை கூடுதல் தூரத்தை அனுமதிக்கலாம். மேற்கூறிய இடங்களை தவிர மற்ற இடங்களுக்கு இது பொருந்தாது.

சிவகங்கை மாவட்டத்தில் இந்த மினி பேருந்து புதிய விரிவான திட்டம் 2024 இன் கீழ் வழித்தட வரைபடங்களுடன் கூடிய விவரங்களை மேற்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள், தனியார் அமைப்புகள், பேருந்து மற்றும் மினி பேருந்து உரிமையாளர்கள் சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலரிடம் 12.02.2025 முதல் சமர்ப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

## கன்னியாகுமரி செண்பகராமன்புதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு



கன்னியாகுமரி, பிப்.6

கன்னியாகுமரி மாவட்டம் செண்பகராமன்புதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி செண்பகராமன்புதூர் காசநோய் அலகு மற்றும் மருத்துவமனைகளில் உள்ள காசநோய் கண்டறியும் ஆய்வகம் உள்ளிட்டவைகளில் ஆய்வு மேற்கொண்டு, இம்மாதத்தில் எவ்வளவு காசநோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

முந்தைய மாதத்தில் எவ்வளவு காசநோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன? மற்றும் காசநோயாளிகளின் நிலைப்பாடு குறித்து துறை அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது.

நமது மாவட்டம் முழுவதும் 100 நாட்கள் தீவிர காசநோய் கண்டறியும் முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முகாம் எவ்வாறு நடைபெற்று வருகிறது? எத்தனை காசநோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது? மாவட்டத்தில் காசநோயாளிகளுக்கு முறையாக ஊட்டச்சத்து பெட்டகம் பெற்றுள்ளார்களா? இந்த ஊட்டச்சத்துக்கு சென்று மாதந்தோறும் அரசு கொடுக்கும் ஊக்கத்தொகை முறையாக செலுத்தப்பட்டுவருகின்றதா? காசநோயாளிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கு காசநோய் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதா? உள்ளிட்டவைகள் குறித்து துறை அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது.

காசநோய் நோயாளிகளிடம் அவர்களுக்கு சிகிச்சை காலங்களில் மாதந்தோறும் 1000 கிடைக்கிறதா என கேட்டறியப்பட்டது. நமது மாவட்டத்திற்காக கொடுக்கப்பட்ட இலக்கினை அடைய நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், துணை இயக்குநர் மருத்துவ பணிகள் (காசநோய்), மாவட்ட சுகாதார அலுவலர், துணை இயக்குநர் (குடும்ப நலம்) மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



மதுரை திருமங்கலம் முத்தண்ணபட்டியில் உள்ள முன்னாள் அமைச்சர் சேடபட்டி முத்தையா நினைவிடத்தில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அஞ்சலி செலுத்தினார். தெற்கு மாவட்ட செயலாளர் மணிமாறன், திருமங்கலம் நகராட்சி தலைவர் ரம்யா முத்துக்குமார், துணைத் தலைவர் ஆதவன் அதியமான், திமுக நிர்வாகிகள் விமல், பாசபிரபு, கவுன்சிலர் காளிதாஸ் மற்றும் பலர் உள்ளனர்.






இராமநாதபுரம் ஆயுதப்படை மைதானம் வளாகத்தில் பால்வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் ஆவின் நிர்வாகம் மூலம் புதிய ஆவின் பாலகத்தை திறந்து வைத்து முதல் விற்பனையை துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ்.ஆகியோர் உடன் இருந்தனர்.



மதுரை மாநகராட்சி செல்லூர் பாலம் ஸ்டேசன் ரோடு அருகில் செல்லூர் கண்மாயில் இருந்து வைகை ஆற்றில் தண்ணீர் செல்வதற்காக புதிதாக கட்டப்பட்டு வரும் கால்வாய் கட்டுமான பணிகளை ஆணையாளர் சித்ரா விஜயன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் தலைமை பொறியாளர் ரூபன் சுரேஷ், செயற்பொறியாளர் (திட்டம்) பாக்கியலெட்சுமி மற்றும் பொறியாளர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## காஞ்சிபுரம் ஒரகடத்தில் இலவசமாக வழங்கும் வாடகையில்லா மண் அள்ளும் இயந்திரத்தின் கொடியசைப்பு விழா






ஒரகடம் பிப்.6

எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் அறக்கட்டளை, காயத்ரி அறக்கட்டளை மற்றும் கணேஷ் எர்த் மூவர்ஸ் இணைந்து இலவசமாக வழங்கும் வாடகையில்லா மண் அள்ளும் இயந்திரத்தின் கொடியசைப்பு விழா நடைபெற்றது

காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் அறக்கட்டளை, காயத்ரி அறக்கட்டளை மற்றும் கணேஷ் எர்த் மூவர்ஸ் இணைந்து இலவசமாக வழங்கும் வாடகையில்லா மண் அள்ளும் இயந்திரத்தின் கொடியசைப்பு விழா வெகுவிமர்சையாக நடைபெற்றது. எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் அறக்கட்டளை தலைவர் எஸ்.செந்தூர் பாரி தலைமையில், கோமாட்சு, எல்-டி மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் விழா சிறப்பாக நடத்தப்பட்டது.

இந்த முயற்சி, தமிழகத்தின் நீர்நிலைகளை பாதுகாப்பதும், புதுப்பிப்பதும் குறித்த முன் பார்வையுடன் துவக்கப்பட்டது. ஏற்கனவே, இதுபோன்ற ஆறு இயந்திரங்கள் தஞ்சாவூர், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் ஏரிகள், குளங்கள் மற்றும் கால்வாய்களை ஆழப்படுத்தி, தண்ணீர் நிலைகளை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த திட்டம், நீர் மேலாண்மையில் முக்கியமான பங்காற்றி, நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதோடு, உள்ளூர் சமூகங்களுக்கு நீர் பற்றாக்குறையை சமாளிக்க உதவுகிறது.

விழாவில் பேசிய செந்தூர் பாரி, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சமூகப் பங்களிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, காலநிலை மாற்றத்துக்கு எதிராகப் போராட இத்தகைய முயற்சிகளை பலப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், அனைத்து அமைப்புகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

இந்நவீன இலவச மண் அள்ளும் இயந்திரம், நீர்நிலைகளை பாதுகாக்கும் பணிகளை மேலும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிகழ்வு, எதிர்கால சந்ததிகளுக்காக நீர்நிலைகளை மீட்டெடுக்கும் பிரயாணத்தில் தொடர்ந்து முன்னேறுவோம் என்ற உறுதிமொழியுடன் நிறைவடைந்தது இதில் தலைவர் கட்டுமான உபகரண வணிகம் நிர்வாகிகள் விவேக் ஹஜேலா, சஞ்சய் கார்கலா, நாகானந்த், மஹேந்திர குமார், ரவி, எல்-டி நிர்வாகிகள் வாட்சன் ஆபிரகாம், ஹரிஹரசுதன், கோமட்சு நிர்வாகிகள் கைலாஷ், தில்லிபாபு, வடிவேல்

எக்ஸ்னோரா நிர்வாகிகள் மடிப்பாக்கம் சுப்ரமணியன், மோகன் முனவர்தீன், சீதாராமன், சங்கீதா உள்ளிட்ட நிர்வாகியாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்..

## மானாமதுரை வட்டம், சின்னகண்ணனூர் கிராமத்தில், வருகின்ற டிச.12 அன்று மக்கள் தொடர்பு முகாம்



சிவகங்கை பிப்.6

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மானாமதுரை உள்வட்டம், சின்னகண்ணனூர் குரூப், சின்னகண்ணனூர் கிராமத்தில், வருகின்ற 12.02.2025 அன்று காலை 10.00 மணியளவில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெறவுள்ளது.

மக்கள் தொடர்பு முகாமில், அரசுத்துறை அலுவலர்களை ஒருங்கிணைத்து அரசின் திட்டங்களை துறை சார்ந்த முதன்மை அலுவலர்களைக் கொண்டு, பொதுமக்களுக்கு திட்டங்கள் குறித்து எடுத்துரைத்து, தகுதிவாய்ந்த பயனாளிகளை பயன்பெறச் செய்வதே இம்மக்கள் தொடர்பு முகாமின் நோக்கமாகும்.

எனவே, மேற்கண்ட கிராமத்தை சேர்ந்த பொது மக்கள் அனைவரும் நடைபெறவுள்ள மக்கள் தொடர்பு முகாமில் கலந்து கொண்டு, அரசின் திட்டங்களை பெறுவதற்கான வழிமுறைகளை அறிந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

## முல்லைப் பெரியாறு அணை நீர் மட்டத்தை உயர்த்தக்கூடாது காந்தி ஜி வேஷத்தில் போராட்டம் நடத்தியவர்கள் கைது



கம்பம், பிப்.6

கேரள மாநிலம் குமுளியில் முல்லைப் பெரியாறு அணையில் நீர் மட்டத்தை உயர்த்தக்கூடாது என்று காந்தி ஜி வேஷத்தில் போராட்டம் நடத்தியவர்களை போலீசார் கைது செய்தனர்.



கேரள மாநிலம் குமுளியில் முல்லைப்பெரியாறு அணையில் ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் சார்பில் அணையின் நீர்மட்டத்தை உயர்த்தக்கூடாது எனவும் சுரங்கம் அமைத்து தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம், 136 அடி உயரத்திற்கு மேல் தேக்க கூடாது, புதிய அணை கட்ட வேண்டும் என்று கோஷமிட்டவாறு ஊர்வலமாக வந்தனர்.

காந்தி ஜி வேடம்அணிந்தும் நூற் சுற்றும் ராட்டைகள் ஏந்தி இரண்டு பெண்கள் வந்தன. குமுளி பேருந்து நிலையம் வரும்போது குமுளி போலீசார் அவர்களை தடுத்தனர்.அதற்கு கோஷமிட்டவாறு தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அவர்களை போலீசார் கைது செய்தனர்.

## வாடிப்பட்டி அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள்

வாடிப்பட்டி, பிப்.6

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மை பாரத் நேரு யுகேந்திரா மற்றும் முள்ளி பள்ளம் ஜே பி மகளிர் மன்றம் சார்பாக மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடந்தது. இந்த போட்டியினை உதவி தலைமை ஆசிரியர் விஜயரங்கன் தலைமை தாங்கி துவக்கிவைத்தார். அன்னை அகாடமி சேர்மன் ஆண்டி



முன்னிலை வகித்தார். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ், கேடயம்,கோப்பை, மெடல் உள்ளிட்ட பரிசுகளை அரசு சட்டக் கல்லூரி உதவி பேராசிரியர் முரளிதரன், வழக்கறிஞர்கள் முத்துமணிமூர்த்தி, தங்கபாண்டி ஆகியோர் வழங்கினார்.இதில் மாணவ மாணவியர்களுக்கு வாலிபால், 400 மீட்டர் ஓட்டப்பந்தயம், சிலம்பம், கயிறு இழுத்தல், 100 மீட்டர் ஓட்ட பந்தயம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. உடற்கல்வி ஆசிரியர் சுரேஷ் விளையாட்டு போட்டிகளின் நடுவராக இருந்தார். முடிவில் ரோஜா மகளிர் மன்ற நிர்வாகி சந்தியா நன்றி கூறினார்.

## வத்தலகுண்டு மதிமுக ஒன்றிய பேரூர் நிர்வாகிகளின் சுப்பிரமணிய சிவாவிற்கு மணிமண்டபம் அமைக்க ஆலோசனை

வத்தலகுண்டு பிப்.6

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு தனியார் மஹாலில் மதிமுக ஒன்றிய பேரூர் நிர்வாகிகளின் அவசர கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்திற்கு மதிமுக வடக்குஒன்றிய செயலாளர் மருது ஆறுமுகம் தலைமை தாங்கினார். மாவட்ட பிரதிநி .செந்தில் வரவேற்க, மாவட்ட மருத்துவ அணி செயலாளர் .சதிஸ் , பேரூர் பொருளாளர் கனேசன் ஆகியோர் முன்னிலை வைத்தனர் , துனை செயலாளர் அர்ஜீன் பேரூர் நிர்வாகிகள் பிரபாகரன், மருது, பரமேஸ்வரன் , திவாகர்



ஆகியோர் மற்றும் ஏ பிரிஜிட் ஆரோக்கியமேரி மாவட்ட .மகளிர்அணிதுனைசெயலாளர் , அ. மூர்த்தி மாவட்ட இலக்கிய அணி துனை செயலாளர், சேவுகம்பட்டி து.செயலாளர் திருப்பதி, ராஜபாண்டி, விவசாய அணியினர் கணவாய்பட்டி பெருமாள், எழுவணம்பட்டி முருகேசன், செங்கடாம்பட்டி கருணாகரன் , இளைஞரணி விஜயகுமார் ராமநாயக்கன்பட்டி) , மாணவரணி காமாட்சிபுரம் சுதாகர், நாகராஜ், ஆரோக்கியசாமி ,தொண்டரணி மதலைமுத்து, ஆலோசனையில் தற்போது மதிமுகவில் உள்ள மாவட்ட உட்கட்சி கட்டமைப்பு மற்றும் செயல் பாடுகள் பற்றியும் தலைவர் வைகோ , முதன்மை செயலாளர் துரைவைகோ ஆகியோரிடம் வத்தலகுண்டு மண்ணின் தேவைகளையும், பொதுமக்களுக்கு நாம் எடுக்க வேண்டிய முன்னெடுப்புகளையும் , தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு வதிலையில் மணிமண்டபம் நிறுவ வலியுறுத்தவும் தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன முடிவில் இலக்கிய அணி நாகேந்திரன் நன்றி கூறினார். இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் சார்பு அணியினர் என பலர் கலந்து கொண்டனர்

## மதுரையில் இணையவழி விளையாட்டுக்கு அடிமையாதாலும் மாணவர்களுக்கான எதிர்வினைகள் குறித்த விழிப்புணர்வு முகாம்



மதுரை பிப் 06

மதுரை வேலம்மாள் பொறியியல் கல்லூரி கூட்டராங்கில்மாவட்ட காவல் ஆணையர் லோகநாதன் தலைமையில் தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையம் சார்பாக இணையவழி விளையாட்டுக்கு அடிமையாதாலும் மாணவர்களுக்கான எதிர்வினைகள்" குறித்த விழிப்புணர்வு முகாமில் உரையாற்றினார்.சென்னை தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையம் உறுப்பினர் டாகடர் எம்.சி. சாரங்கன் , மாவட்ட காவல் கண்காணிப் பாளர் பி.கே. அரவிந்த் , மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் ,உதவி ஆட்சியர் (பயிற்சி) வைஷ்ணவி பால் மேலூர் வருவாய் கோட்டாட்சியர் கார்த்திகேயனி , வட்டாட்சியர் ராஜபாண்டியன் ஆகியோர் உடன் உள்ளனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மகாகவி பாரதியாரின் 144வது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்திய அரசியலமைப்பின் உள்நோக்கம் மற்றும் முக்கிய நிகழ்வுகள் தலைப்பில் நடைபெற்ற கட்டுரை போட்டியில் கலந்துகொண்டு மாநில அளவில் 3ஆம் பரிசுபெற்று ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிலும், விருந்திலும் கலந்துகொண்ட திருப்பூர் மாவட்டம் பொங்கலூர் ஒன்றியம் நாச்சிபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பயின்றுவரும் 7ஆம்வகுப்பு மாணவி நூ.ஜெசிகா திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் சந்தித்து வாழ்த்துபெற்றார்.

## தூத்துக்குடி மாவட்டத்தில் தேசிய குடற்புழு நீக்கும் முகாம்

தூத்துக்குடி, பிப்.6

தூத்துக்குடி மாவட்டத்தில், தேசிய குடற்புழு நீக்கும் முகாம் 10.022025 அன்றும். விடுபட்டவர்களுக்கு 17022025 அன்றும் நடைபெற உள்ளது. இம்முகாமில் ஒரு வயது முதல் 19 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும். 20 வயது முதல் 30 வயதுடைய பெண்களுக்கும் குடற்புழு நீக்க அல்பெண்டசோல் மாத்திரை வழங்கப்பட உள்ளது. கர்ப்பிணி பெண்கள் மற்றும் தாய்ப்பாலூட்டும் தாய்மார்கள் இம்மாத்திரைகளை எடுக்கத் தேவையில்லை.

குடற்புழு நீக்க மாத்திரை அனைத்து குழந்தைகளுக்கும் மற்றும் பெண்களுக்கும் கொடுப்பதன் மூலம் குடலில் உள்ள குடற்புழு தொற்று நீங்குவதுடன் இரத்த சோகை ஏற்படாமல் தடுக்கிறது. மேலும் குடற்புழு தாக்கத்தினால் ஏறபடக்கூடிய வயிற்றுவலி வயிற்றுபோக்கு வாந்தி, சோர்வு மற்றும் படிப்பில் ஆர்வமின்மை ஆகியவை ஏற்படாமல் தடுக்கிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் 4,48,586 குழந்தைகளுக்கும் மற்றும் 110,462 பெண்களுக்கும் அல்பென்ட்சோல் மாத்திரை வழங்கப்பட உள்ளது. இந்த முகாம் 1583 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள். 119 தனியார் பள்ளிகள் மற்றும் 1477 அங்கன்வாடி மையகளில் நடைபெற உள்ளது. இம்முகாமில் பொது சுகாதாரத் துறை பள்ளி கல்வித்துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணிகள், ஊராட்சி துறை மற்றும் நகர்புற பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். எனவே பயனாளிகள் அனைவரும் குடற்புழு நீக்க மாத்திரை பெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், அன்புடன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சிவகங்கையில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் முகாம்

சிவகங்கை, பிப்.6

சிவகங்கை மாவட்டத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாம் வருகின்ற 19.02.2025 அன்று சிங்கம் புணரி வட்டத்தில் நடைபெற வுள்ளதையொட்டி, வருகின்ற 13.02.2025 முதல் 17.02.2025 வரை சிங்கம்புணரி வட்டத்திற் குட்பபட்ட பேரூராட்சி அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகத்தில், பொதுமக்கள் தங்களது கோரிக்கை தொடர்பான மனுக் களை அளிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தகவல் தெரிவித்துள்ளார்.



மக்களை நாடி, மக்கள் குறை களைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின்படி மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து மாவட்ட அலுவலர்களும் வட்ட அளவில் தங்கி கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அரசின் அனைத்து நலத்திட்டங்களும் சேவைகளும் தங்கு தடையின்றி மக்களை சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு 2025 ஆம் ஆண்டிற்கு சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டத்தில் வருகின்ற 19.02.2025 அன்று "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டம் நடைபெற உள்ளதால் துறை அலுவலர்கள் பொது மக்களிடம் வந்து மனுக்களைப் பெற்றுக் கொள்வார்கள். இருப்பினும், பொதுமக்கள் தங்கள் கோரிக்கை தொடர்பான மனுக்களை நேரில் கொடுக்க விரும்பினால் வருகின்ற 13.02.2025 முதல் 17.02.2025 வரையிலான அரசு அலுவலக நாட்களில் சிங்கம்புணரி வட்டத்திற்குட்பபட்ட பேரூராட்சி அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

## இராமநாதபுரம் மாவட்டம் திருமண நிதியுதவி தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தில் 136 பயனாளிகளுக்கு ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் திருமண நிதியுதவி

இராமநாதபுரம், பிப்.6

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்) சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு முதலமைச்சரின் தாலிக்கு தங்கம் மற்றும் திருமண நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்,தலைமை வகித்தார். இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் முன்னிலை வகித்தனர். பால்வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் ஏழைப் பெண்களுக்கான திருமண நிதியுதவி திட்டத்தில் தாலிக்கு தங்கம் மற்றும் திருமண நிதியுதவி வழங்கி பேசுகையில்,



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்களை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இத்துறையின் மூலம் ஐந்து வகையான திருமண நிதியுதவி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்த நிலையில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டம் மாற்றியமைக்கப்பட்டு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி திட்டம் என்னும் புதுமைப்பெண் திட்டம் 2022 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு பெண் குழந்தைகள் உயர்கல்வி பெறும் பயனுள்ள திட்டமாகவும், மக்களிடம் நல்ல வரவேற்பான திட்டமாக செயல்பட்டு வருகிறது.

மேலும் இத்துறையின் மூலம் ஈ.வெ.ரா.மணியம்மையார் விதவை மகள் திருமண நிதியுதவி திட்டம், அன்னை தெரசா ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவி திட்டம், டாக்டர்.முத்துலட்சுமி நடப்பு திருமண நிதி உதவி திட்டம், டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமண நிதியுதவி திட்டம் படித்த வறுமையில் உள்ள பெண்களுக்கு திருமண நிதியுதவி திட்டம் வழங்கப்படுகிறது. இதில் ஏற்கனவே வழங்கி வந்ததை போல் 10 மற்றும் 12ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு ரூ.25,000/ உம், 8 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. பட்டப்படிப்பு படித்த பெண்களுக்கு ரூ.50,000/ உம், 8 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. கடந்த 2021 முதல் 2024 ஆம் ஆண்டு வரை மேற்கண்ட 4 திட்டத்தின் மூலம் 3003 பயனாளிகளுக்கு தாலிக்கு தங்கம் தலா 8 கிராம் மற்றும் திருமண நிதியதவி வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டிற்கு தற்பொழுது 10 மற்றும் 12 ஆம் வகுப்பு படித்த 62 பெண்களுக்கு தலா ரூ.25,000/ மற்றும் தலா 8 கிராம் தங்கமும், பட்டப் படிப்பு படித்த 74 பெண்களுக்கு தலா ரூ.50,000/ தலா 8 கிராம் தங்கம் என மொத்தம் 136 பயனாளிகளுக்கு 1,26,19002/ மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் வறுமையில் உள்ள குடும்பங்களை சேர்ந்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து கல்லூரிக்கு செல்லும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/ பெறுகின்ற வகையில் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அதேபோல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து கல்லூரிக்கு செல்லும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ பெறும் வகையில் தமிழ் புதல்வன் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இது மட்டுமின்றி கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டம், மக்களை தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி என எண்ணற்ற திட்டங்களை வழங்கி வருவதுடன் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் திட்டங்களுக்கும் கூடுதல் நிதியுதவி யார் வழங்கிய திட்டமாக இருந்தாலும் பாகுபாடின்றி திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்வதில் தலை சிறந்த முதல்வராக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். அதிலும் குறிப்பாக பெண்கள் அதிகளவு வளர்ச்சி பெறும் மாநிலமாக தமிழ்நாடு இருந்து வருகிறது. அதற்கு காரணம் தமிழ்நாடு முதலமைச்சர் திட்டங்களை ஆகும். எனவே கிராமப் பகுதியில் உள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை உயர்கல்வி வரை படிக்க வைத்து அரசியல் திட்டங்களை பெற்று பயன் பெற்றிட வேண்டுமென பால்வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள்; தெரிவித்தார்.

தொடர்ந்து 136 பயனாளிகளுக்கு தலா 8 கிராம் தங்கம் மற்றும் திருமண நிதியுதவி என ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை பால்வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் நகர் மன்றத்தலைவர் ஆர்.கே.கார்மேகம் அவர்கள், இராமநாதபுரம் நகர் மன்ற துணைத்தலைவர் டி.ஆர். பிரவீன் தங்கம் அவர்கள், மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் தேன்மொழி, மாவட்ட சமூக நலத்துறை கண்காணிப்பு அலுவலர் முத்துலெட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161